# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No.173/2012 Date: 25.03.2025

PW1-சுமதி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத, படிக்க சுமாராக தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியாது. அதன் பட்டா எண் தெரியாது. புல வரைபடத்தை பார்த்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் என் அம்மாவின் தாத்தா நல்லையகவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அவருக்கு பழனி, மொட்டையன் (எ) பெரியண்ணன் ஆகியோர்கள் மகன்கள். வேறு வாரிசுகள் இல்லை. பழனியின் மகன்கள் செங்கோடன், குருசாமி. செங்கோடனுக்கு பழனா என்ற மனைவியும், சரசா, கந்தாயி ஆகியோர் மகன்கள். சரசா என் அம்மா. குருசாமி எனக்கு பெரிய தாத்தா. அவருக்கு நாகம்மாள் என்ற மனைவி, ரகு என்ற மகன் ஆகியோர்கள் வாரிசுகள். மொட்டையன் (எ) பெரியண்ணனுக்கு பழனி, ருக்குமணி ஆகியோர் வாரிசுகள். நல்லையகவுண்டரின் சொத்தில் சரசா, கந்தாயி ஆகியோருக்கு ¼ பாகமும், நாகம்மாள், ரகு ஆகியோருக்கு ¼ பாகமும் பாத்தியம் என்றால் சரிதான். ருக்குமணி, பழனி ஆகியோருக்கு ½ பாகம் பாத்தியம் என்றால் சரிதான். அ.வ.எண்.233/1997 வழக்கு பற்றி எனக்கு தெரியும். மேற்படி வழக்கில் யாருக்கு எவ்வளவு சொத்து பாகம் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணையில் பாகம் பிரித்து ஒதுக்கப்பட்டது தெரியுமா என்றால் அவ்வாறு பாகம் பிரித்து ஒதுக்கப்படவில்லை. மேற்படி வழக்கின் தீர்ப்புக்கு பின்னர் தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து புள்ளாகவுண்டம்பட்டியில் எடப்பாடி மெயின் ரோட்டில் உள்ளது. அந்த சொத்தில் மெயின் ரோட்டை ஒட்டி ரகு மகன்கள் சின்னமணி, சக்திவேல், சரவணன் ஆகியோர் வீடு கட்டி வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு தாவா சொத்தில் ¼ பாகம் பாத்தியம் என்றால் சரிதான். அதே அளவு தான் என் அம்மாவிற்கும்

சின்னம்மாவிற்கும் பாத்தியம் என்றால் சரிதான். அ.வ.எண்.233/1997 வழக்கில் பாகப்பிரிவினை ஏற்பட்டதை ரகு மற்றும் அவரது வாரிசுகள் ஏற்றுக்கொண்டு தான் வீடு கட்டி வருகிறார்கள் என்றால் சரிதான். ரகுவின் வாரிசுகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் மேற்கு பகுதியில் ருக்குமணி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். கிழக்கு பகுதியில் நாங்களும், ரகுவின் மகன்களும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். சத்யராஜ் கட்டிவரும் வீட்டிற்கு கிழக்கே பொது கிணறு உள்ளது. அந்த கிணற்றுக்கு கிழக்கில் ருக்குமணி வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் வழியாக எங்களுக்கு தடம் வேண்டும் என்று தான் இத்தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி கிணற்றுக்கும் ருக்குமணி வீட்டிற்கும் இடையில் ஏற்கனவே தடம் இருந்தது. தற்போது அதை அடைத்துவிட்டார்கள். சத்யராஜ் கட்டி வரும் வீட்டை ஒட்டி கிழமேலாக எங்களது பாகத்திற்கு செல்ல தடம் உள்ளது என்றால் சரியல்ல. அந்த தடம் வா.சா.ஆ.4 இறுதிநிலை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்ட வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த தடம் பூஸ்துதியில் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/-சுமதி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.